இ) கீற்றுகள் எல்லாம் அவற்றின் நிறைவு ஒழுங்கில் ஒன்றாக ஒட்டப்பட்டபின், குழுக்கள் தம் எழுத்துருக்களை வகுப்புக்கு எடுத்துரைப்புச் செய்வர். வகுப்பின் ஏனையவர் உண்டாக்கிய எல்லா எழுத்துருக்களையும் விளக்குவர்.

## 4. உயர்தர எழுத்துரு வகைகளுடன் ஆய்வுப்பயிற்சி

5 - 9 ஆந் தரம்

30 மணித்துளிகள்

கருவிகள்:
மாற்றினைப் பொறுத்து
(வலம் பார்க்கவும்)

முழு எழுத்துருக்களையும் உள்ளடக்கியதாக கவர்ச்சியுள்ள அறிவாற்றலுள்ள பயிற்சிகள் பல்வேறு வடிவங்களில் அமையக்கூடியவை. எனினும் இவ்வகை ஆய்வுகள் முதல் மொழி மற்றும் அதன் நடையியல் முகப்புக்கூறுகள் என்பவற்றில் ஓரளவு நிலைப்பட்ட உணர்வு வேண்டப்படுகிறது. இத்தகு உணர்வு இல்லாத நிலையில் தேவையான தகவலும் வழிகாட்டலும் வேண்டப்படுகின்றன. பல்வகை எழுத்துருக்கள் (பாடல்கள், உண்மை எழுத்துருக்கள், தேவதைக் கதைகள், குறுஞ்செய்திகள், நகைச்சுவை, முதலியன) பற்றிய அறிவு தொடர்பாக இதே நிலையே வேண்டப்படுகிறது / உண்மையானதாகும்.

### நடையும் தொனியும், மாற்றுகள்:

- முறைசார்பிலும் தொனியிலும் பல்வகை நிலைகளில் பொருத்தமான ஒரு சிறிய எழுத்துருவின் வேறுபாடுகள். நிகழ்த்தக்கூடிய பணிகள்: "நண்பர் / உங்கள் பேரன் பேர்த்திமார / உங்கள் பிறந்தநாட்டுத் தூதுவராலயத்திலிருந்து புத்தாண்டுப் பரிசாக நீங்கள் ஒரு நூலைப் பெற்றுள்ளீர்கள். பொருத்தமான முறைசார் நிலையில் அவர்களுக்கு ஒரு நன்றிக் குறிப்பு எழுதுக." (பேச்சுமொழி உள்ளிட்ட மிகு முறைசார் எழுத்துமாழி முதல் முறைசார் மொழிக்கேற்றபடி தொனி வேறுபடும்.)

- ஐந்து போக்குவரத்துக் குறியீடுகளைத் தெரிவுசெய்க (எ.கா. நில், ஒருவழிப்பாதை, திரும்பத் தடை முதலியன). அக் குறியீடுகள் உண்மையில் எவற்றை உணர்த்துகின்றன என்பதை எழுத்தில் புலப்படுத்துக (எ.கா. "நீங்கள் இங்கு நிறுத்தவேண்டும்", "இங்கு, நீங்கள் ஒரு வழியில் மட்டுமே பயணிக்கலாம்", முதலியன.) இப்பொழுது இக்கூற்றுகளை வெவ்வேறு அளவையிலான முறைசார் / மதிப்புடை முறையில் வடிவமைக்குக. இது தொடர்பாக நீங்கள் பேச்சுமொழியையும் கொச்சை மொழியையும் பயன்படுத்தலாம். (தயவுசெய்து நிறுத்துவீர்களா? நன்றி! என்பது பின்வரும் மிகுந்த முறைசாரா முறைக்கு எதிரானது: "முட்டாளே வாகனத்தை நிறுத்து". இதற்கேற்ற வேடிக்கையான ஒரு சுவரொட்டி தயாரிக்குக!) (அளவு A3 அல்லது A4)

- செய்தித்தாள் சிறு கட்டுரை ஒன்றினை, ஒரு கவிதையை அல்லது வேறொரு வகையான ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும். மூன்று அல்லது நான்கு பேர் உள்ள குழுக்களில், யார் எந்த நடையில் (எ.கா. பேச்சுமாழி, கொச்சைமொழி, நகைச்சுவை மொழி, நேர்த்தியான மொழி, "கடுமையான" மொழி) இந்த எழுத்துருவை மீள் எழுத்துருவாக்கம் செய்வார் என்பதைத் தீர்மானிக்க வேண்டும். உங்கள் கருத்துப்பாங்குகளை எழுதி ஒருவர்க்கொருவர் படித்துக்காட்டவும்!

### எழுத்துரு வகைகள் பலவிதமானவை

- ஒரு சுருக்க எழுத்துருவை எடுக்கவும், எ.கா. ஒரு செய்தித்தாள் கட்டுரை. ஒரு வகுப்பாக அல்லது அதேநிலையான குழுவாக, பல்வகை எழுத்துருக்களை ஒரு கவிதையாக, உண்மை எழுத்துருவாக, ஒரு தேவதைக் கதையாக, ஒரு தந்திச் செய்தியாக, ஒரு குறுஞ்செய்தியாக, ஒரு நகைச்சுவையாக, ஒரு ஒலிப்பதிவாக அல்லது ஒரு பரபரப்பான அறிக்கையாக மாற்றுவது பற்றி எண்ணுக. யார் (தனியாக அல்லது இணைகளாக) எந்த எழுத்துரு வகையை ஆக்குவார் என்பது பற்றி முடிவுசெய்க. முடிவாக, பல்வகை எழுத்துருக் கருத்துப்பாங்குகளை கலந்துரையாடி ஒப்பிடுக.

- உங்கள் பிறந்த நாட்டோடு தொடர்பான தலைப்புகள் தொடர்பாக இதேமாதிரி முயற்சி செய்க. எடுத்துக்காட்டாக, புகழ்மிக்க ஒருவரின் வாழ்க்கைக் கதையிலிருந்து காட்சிகளை ஒரு வானொலி நாடகமாக மாற்றுக, அல்லது இயற்கை நிலக்காட்சி ஒன்றுபற்றி கவிதை எழுதுக, வரலாற்று நிகழ்வுகள் பற்றி ஒரு தந்திச்செய்தி அல்லது செய்தித்தாள் கட்டுரைகளைக் கண்டுபிடிக்குக.

- உங்கள் பாரம்பரியமொழியில் எழுதப்பட்ட வெவ்வேறு எழுத்துருக்களைத் திரட்டி ஒரு கண்காட்சி அமைக்குக. ஒவ்வொரு மாணவனும்/மாணவியும் ஓர் எழுத்து மாதிரியினை வகுப்புக்குக் கொண்டுவந்து (ஒரு கவிதை தொடக்கம் ஒரு நகைச்சுவை, புனைகதையல்லா எழுத்துரு, ஒரு குறுஞ்செய்தி, அல்லது மின்னஞ்சல் வரை) இம்மொழி மாதிரியின் தனிச்சிறப்பு என்ன என்பதை விளக்கவேண்டும்.

### எழுத்து நடையைக் கற்பிக்க பின்வரும் முக்கிய பரிந்துரைகள் எடுத்துக்காட்டாக அமையும்:

- #4 இல் விவரிக்கப்பட்ட பரிந்துரைகள் கதை புனைதல், கதை பின்னுதல், முதலியனவும் எழுத்து நடையைக் கற்பிக்க இயல்பாகத் தாமாகவே துணை நல்குகின்றன.
- மாற்றுச் சொற் பயிற்சிகளைப் பழக 15.2 இலுள்ள பரிந்துரைகள் சொற்கள் தொடர்பாக கற்பித்தல் நடைக்கு நல்ல எடுத்துக்காட்டுகளை வழங்குகின்றன.
- 16.3 இல் விவரிக்கப்பட்ட (பிறப்பாக்க எழுத்துகள்) இணைநிலை எழுத்துருக்களுடன் செயற்படுதலும் நடையியல் தொடர்பாக மிகுந்த மதிப்புடையதாகும். கதை பின்னுதல் மாதிரியையும் நோக்குநிலைக்குப் பயன்படுத்தல், பின்னர் அதிலிருந்து வாக்கியக் கூறுகளை தெரிந்தெடுத்தல், மாணவர்களுக்கு மிகக் குறைந்த அழுத்தமுடையதாகவும் மிக அரிய எழுத்து நடைப் பயிற்சியை வழங்குகிறது.
- எழுத்து நடையைக் கற்பிப்பதற்கு இன்னொரு மக்கள் வயப்பட்டதும் பயனுடையதுமாகிய செயற்பாடு "வாய்வழி எழுத்து மணித்தியாலங்கள்" எனப்படுவதாகும்: மாணவர்கள் உண்மையில் தாமாக ஓர் எழுத்துருவை எழுதுவதில்லை; மாறாக ஒரு தலைப்புப் பற்றி எவ்வாறு ஓர் எழுத்துருவை உருவாக்கலாம், கட்டமைக்கலாம் என்பது பற்றி விரிவாகப் பேசுவர். மாற்று: மாணவர்கள் ஏற்கெனவே எழுதப்பட்ட எழுத்துரு பற்றிப் பேசுவர் (பெரும்பாலும் சில காலத்துக்கு முன்னர், அல்லது மற்றைய வகுப்பு மாணவனால்/மாணவியால் எழுதப்பட்டது).